**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No.118/2023**

**வா.சா.2 – விக்னேஷ் 21.01.2026**

**3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

இந்த வழக்கை பற்றி எனது அம்மா ஜெயலலிதா கூறினார். எனக்கு சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வரவில்லை. எனது தாயார் 3வது வாதி கேட்டுக்கொண்டதன்பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்க என் அம்மா பவர் ஏதும் கொடுக்கவில்லை. 1,2 வாதிகள் எனது பெரியம்மா. தாவா சொத்துக்களின் சர்வே எண் எனக்கு ஞாபாகம் இல்லை. தாவா சொத்துக்களுக்கு சூரியகண்ணுவிற்கு பூர்வீக சொத்துகள் என்பதற்கு ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. தாவா சொத்துக்கள் பாகம் செய்யவில்லை என்ற விபரத்தை என் அம்மா கூறினார். தாவா சொத்துக்கள் சம்பந்தமாக மானாமதுரை மாவட்ட உரிமையியில் நீதிமன்றத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகளும் தரப்பினராக இருந்து வழக்கு நடந்து அந்த தீர்பபில் தாவா சொத்துக்கள் ஏற்கனவே பாகம் செய்யப்பட்டு விட்டது என்று கூறப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பெரியம்மா இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்தபோது நான் அவருடன் வரவில்லை. ஒவ்வொரு வாய்தாவிற்கும் நான் அவருடன் வருவேன் என்றும் தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. சூரியகண்ணு என்பவரை நான் பார்த்துள்ளேன் அப்போது எனக்கு வயது 3 இருக்கும். எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள தானசெட்டில்மெண்ட் எப்போது எழுதப்பட்டது என்று எனக்கு ஞாபாகம் இல்லை. அந்த தானசெட்டில்மெண்ட் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் ஞாபாகம் இல்லை. ஏதோ விரேரதத்தில் 2ம் பிரதிவாதி 3,4 பிரதிவாதிகளுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி நல்லதம்பி 3ம் பிரதிவாதி சுமதியின் கணவர் என்றால் சரிதான். 2ம்

பிரதிவாதி 4ம் பிரதிவாதியின் அப்பா என்றால் சரிதான். நான் ஆட்டோ ஓட்டி வருகிறேன். நான் சொந்தமாக ஆட்டோ வைத்துள்ளேனா என்றால் ஆட்டோ கடனில் ஓடுகிறது. தாவா சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் எனது அம்மா கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**5,6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

2ம் பிரதிவாதி நல்லதம்பி எனது தாய்மாமா. 3,4 பிரதிவாதிகளை எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்பந்தமாக யார் யாருக்கிடையில் பத்திரம் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. 1,2 வாதிகள் எனது பெரியம்மா. 3ம் வாதி எனது அம்மா. தாவா சொத்து சம்பந்தமாக பத்திர பதிவு விபரங்கள் தெரியவில்லை என்றாலும் வாதிகள் எங்கள் உறவினர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**